IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
OS.No.47 /2019
Deposition of witness for PW1

Name : பழனி

Father Name : நாராயணசாமி

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 13 day of September, 2023.

குறுக்கு விசாரணை

1. பிரதிவாதி என் உடன் பிறந்த அண்ணன். தாவா அட்டவணை 1வது அயிட்ட சொத்தினை நானும் பிரதிவாதியும் சேர்ந்து தான் வாங்கினோமா என்றால் சரிதான். தாவா அட்டவணை 2வது அயிட்ட சொத்து என் அண்ணன் பெயரில் உள்ளது என்றால் தவறு. தாவா 2வது அயிட்ட சொத்தினை என் அண்ணன் கிரையம் பெறுவதற்கு முன்பே நான் அதில் 10 செண்ட் கிரையம் பெற்றுவிட்டேன். வா.சா.ஆ1 கிரையப்பத்திரத்தில் தாவா அட்டவணை 3வது அயிட்ட சொத்து குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

2. தாவா அட்டவணை 3வது அயிட்ட சொத்து பிரதிவாதி ராஜகோபால் பெயரில் உள்ளது என்றால் தவறு. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட அம்முண்டி கிராம கணினி பட்டா எண்.2523-ல் சர்வே எண்.315/5 பிரதிவாதி ராஜகோபால் பெயரில் உள்ளது என்றால் அது தவறு. 1994-ம் வருடத்திலிருந்து தற்பொழுது வரை சர்வே எண்.315/5-ல் பிரதிவாதி தான் பயிர் செய்து வருகிறார் என்றால் அது தவறு. தற்பொழுது யாருடைய அனுபவத்தில் மேற்படி தாவா 3வது அயிட்ட சொத்தானது சர்வே எண்.315/5 உள்ளது என்றால் பிரதிவாதி ராஜகோபால் தான் அனுபவித்து வருகிறார்.

3. பிரதிவாதி ராஜகோபால் தான் மேற்படி தாவா 3வது அயிட்ட சொத்தின் உரிமையாளர் என்றும், பட்டாவும் அவர் பெயரில் தான் உள்ளது என்றும், அவர் தான் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றும் சொன்னால் அது தவறு. தாவா அட்டவணை 1,2வது அயிட்ட சொத்துக்களைப்பொறுத்து எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை

என்று சொன்னால் அது தவறு. நான் கூறுவது தவறு என்றும், எனக்கும் பிரதிவாதிக்கும் தாவா 1,2 வது அயிட்ட சொத்துக்களைப்பொறுத்து பிரச்சனை ஏதும் இல்லை என்றும், 3வது அயிட்ட சொத்தில் நான் தான் பிரச்சனை செய்துவருகிறேன் என்றும் சொன்னால் அது தவறு.

4. முனுசாமி என்பவரை எனக்கு தெரியும். முனுசாமி என்பவரிடமிருந்து பிரதிவாதி வாய்மொழியான சம்மதத்தைப்பெற்று தாவா அட்டவணை 3வது அயிட்ட சொத்தைப்பொறுத்து பட்டா மாற்றம் செய்துள்ளார் என்றால் அது தவறு. தாவா 3வது அயிட்ட சொத்தை முனுசாமி எனக்கு கொடுப்பதாக கூறியதற்கு ஆதரவாக ஏதேனும் ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ2 பட்டா புத்தகத்தில் தாவா 3வது அட்டவணை சொத்தின் சர்வே எண். 315/5 குறிப்பிட்டிருக்கவில்லை என்றால் சாட்சி வா.சா.ஆ2-ஐ பார்த்துவிட்டு குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறுகிறார்.

5. நான் வா.சா.ஆ2-ல் குறிப்பிட்டு கூறும் சர்வே எண்315/5 கூட்டுப்பட்டாதாரர்கள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். கூட்டுப்பட்டாதாரர்கள் என்று என்னுடைய பெரும், பிரதிவாதி பெயரும் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ2-ல் சர்வே எண்.315/5-ன் யார் உரிமையாளர் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தாவா அட்டவணை 3வது அயிட்ட சொத்து உண்மையிலேயே எனக்கு பாத்தியப்பட்டதாக இருந்தால் அதற்குரிய என்பெயரிலான தனிப்பட்டாவை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல முனுசாமியின் பட்டாவில் என்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

6. நான் கூறுவதுபோல் அதற்குரிய ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது பொய் என்றும், அவ்வாறு எந்த ஆவணங்களையும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் முனுசாமி என்பவர் தாவா அட்டவணை 3வது சொத்தை எனக்கு தானமாக கொடுத்துள்ளதாக கூறுவதற்கு மேற்படி தானபத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல்

செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவது பொய் என்றும், அவ்வாறு எந்த ஆவணங்களையும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

7. தாவா 3வது அயிட்ட சொத்தை உரிமையை கோருவதற்காக பிரதிவாதி மீது இவ்வழக்கை நான் போட்டுள்ளேன் என்றால அது தவறு. தாவா அட்டவணையில் 1,2 அயிட்ட சொத்துக்களை நானும், பிரதிவாதியும் சுவாதீனத்திலிருந்து நல்ல முறையில் அனுபவித்து வருகிறோம் என்றும், தாவா 3வது அயிட்ட சொத்து என் அண்ணன் பிரதிவாதியிடமிருந்து பறிக்கும் நோக்கத்தில் இவ்வழக்கை போட்டுள்ளேன் ஏ்ன்றால் சரியல்ல. தாவா 3வது அயிட்ட சொத்து எனக்கு உரிமையில்லை என்றும், என்னுடைய சுவாதீன அனுபவத்திலும் இல்லை என்றும், எனவே தாவா 3வது அயிட்ட சொத்தில் நான் உரிமை கோர இயலாது என்றும், பிரதிவாதி தான் 3வது அயிட்ட சொத்தில் சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றும் சொன்னால் அது தவறு.

8. எனவே பிரதிவாதி தான் தாவா 3வது அயிட்ட சொத்தின் உடைமையாளர் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் எங்கேயும் எந்த தேதி மாதம் வருடத்தில் பிரதிவாதி என்னிடம் வழக்கு சொத்தைப்பொறுத்து பிரச்சனை செய்தார் என்றும், யார் யார் முன்னிலையில் அவ்வாறு பிரச்சனை ஏற்பட்டது என்றும், குறிப்பிட்டு கூறியிருக்கவில்லை என்றால் அது தவறு. நான் கூறுவது போல் பிரதிவாதி என்னிடம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திலும் பிரதிவாதி நுழைந்ததேயில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி மீது நான் போட்ட இவ்வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> - இல்லை.

K VENKATESAN Digitally signed by K VENKATESAN

DISTRICT MUNSIF

KATPADI.